THE COURT OF THE DISTRICT MUNSIF, TIRUMANGALAM

**DEPOSITION OF WITNESS (P.W.1 )**

Solemnly affirmed and sworn by Tmt.Nagavalli Grade III Bench clerk on 14.09.2022. in accordance with the provisions of Act XX111.

அசல் வழக்கு எண்– 232/2019

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பால சுப்பிரமணியன் | தாலுகா | |
| தகப்பனார் பெயர் | | ஊர் | |
| தொழில் | | மதம் | |
| வயது | | | |

வா.சா. 1 முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1 வது சாட்சியாவேன். நான் எனது முதல் விசாரணையை எழுத்து மூல நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரம் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். அவை அனைத்தும் உண்மையே.

04.06.1949 ம் தேதியிட்ட எனது தாத்தா சுப்பாரெட்டியாருக்கு குருசாமி நாயக்கர் எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தின் அசலை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன்.(**04.06.1949 ம் தேதியிட்ட கிரைய பத்திரம் வா.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)

24.02.1951 ம் தேதியிட்ட எனது தாத்தா சுப்பாரெட்டியாருக்கு குமார்சாமிரெட்டியாக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். ( **24.02.1951 ம் தேதியிட்ட கிரைய பத்திரம் வா.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. )

எனது அப்பா பெயரில் உள்ள கிஸ்தி ரசீதுகளை எனது தரப்பு

ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**தாவா சொத்து கூட்டுகுடும்ப சொத்து என்றும் அதனால் பால்ராஜ் பெயரில் உள்ள ரசீதுகளை குறியீடு செய்யக்கூடாது என்றும் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது.) (பால்ராஜ் பெயரில் உள்ள கிஸ்தி ரசீதுகள் (5 எண்ணம்) வா.சா.ஆ. 3 வரிசை ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

26.10.2018 ம் தேதியிட்ட எனது அப்பாவிற்கு சுப்பாரெட்டியார் எழுதி கொடுத்த தான செட்டில்மெண்டு பத்திரத்தின் அசல் எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**26.10.2018 ம் தேதியிட்ட தான செட்டில்மெண்டு ஆவணம் வா.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

தாவா சொத்திற்கான வில்லங்கம் இல்லை என்று வழங்கிய சான்றிதழை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன்.(**தாவா சொத்திற்கான வில்லங்கம் இல்லா சான்றிதழ் வா.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன்.(**தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

04.11.2019 ம் தேதியிட்ட நான் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். ( **04.11.2019 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்று கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டையை எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்கிறேன். (**அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக இந்த வழக்கு வேறு ஒரு நாளைக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)